



வந்தவாசி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி மற்றும் பள்ளி சீருடைகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், நாடாளுமன்றத் உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அம்பேத்குமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பார்வதிசீனுவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கனமழை எச்சரிக்கை:

## உதகைக்கு தேசிய பேரிடர் மீட்பு குழு வருகை!

நீலகிரி, ஆக.02

நீலகிரி மாவட்டம் உதகைக்கு வானிலை ஆய்வு மையம் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில், நீலகிரி மாவட்டத்தில் 3 நாட்களுக்கு மிக கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணத்தில் இருந்து 32 பேர் கொண்ட பேரிடர் மீட்பு குழுவினர் ஊட்டிக்கு வருகை தந்துள்ளனர்.

பேரிடர் ஏற்படும் இடங்களுக்கு விரைந்து சென்று மீட்பு பணிகளை மேற்கொள்ள மீட்பு குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.

மேலும் இந்த குழுவின ருக்காக 2 வாகனங்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கனமழை எச்சரிக்கையை வானிலை மையம் திரும்ப பெறும் வரை மீட்பு குழுவினர் நீலகிரியில் தங்கியிருப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.


## வலைதளங்களில் வலம் வருவது!





### வயநாடு நிலச்சரிவு: பாதிக்கப்பட்ட பகுதிகளில்

# ராகுல் காந்தி - பிரியங்கா பார்வையிட்டு ஆறுதல்!

வயநாடு,ஆக.2-

வயநாடு நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும், காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தியும் பார்வையிட்டனர்.

தில்லியில் இருந்து கண்ணூர் விமான நிலையத்துக்கு நேற்று காலை 10.30 மணியளவில் வருகை தந்த இருவரும், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு கார் மூலம் சென்றடைந்தனர்.

முதல்கட்டமாக சூரல்மலை பகுதிகளில் மீட்புப் பணிகளை பார்வையிட்டனர். மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளிடம் நிலைமையை கேட்டறிந்தனர்.

இவர்களுடன் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபாலும் சென்றுள்ளார்.



வயநாட்டில் தொடர்மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் 275க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, ராகுல், பிரியங்கா ஆகியோர் புதன்கிழமை அங்கு பயணம் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், வயநாட்டில் தொடர்ந்து நிலவும் மோசமான வானிலை காரணமாக அவர்களின் பயணம் ஒத்திவைக்கப்பட்டது. மாநில முதல்வர் பினராயி விஜயனும் மீட்புப் படையினர் தவிர வேறு யாரும் வயநாடு வர வேண்டாம் என கேட்டுக்கொண்டிருந்தார்.

இந்த நிலையில், இருவரும் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு நேற்ற நேரில் சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து, நிலச்சரிவால் குடும்பங்களை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களை சந்தித்து ஆறுதல் கூறினர்.

### முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி

# கொளத்தூர் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஆக.2-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (01.08.2024) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, பொதுப்பணித் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைகள், மழைநீர் வடிகால்கள், பள்ளிக் கட்டடங்கள், பேருந்து நிலையம், மருத்துவமனை, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகள், வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள், மின் கட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திடவும், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தொடர்புடைய அலுவலர்கள் மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், திரு.வி.க.நகர் மண்டல கண்காணிப்பு அலுவலர் பி.கணேசன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், திரு.வி.க. நகர் மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசுக்கும், பள்ளிகளுக்கும் ஆசிரியர்கள் பாலமாக இருந்து

# மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திட ஒத்துழைப்புத் தாரீர்!

## திருவண்ணாமலையில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு வேண்டுகோள்!

திருவண்ணாமலை, ஆக.02-

"அரசுக்கும் பள்ளிகளுக்கும் ஆசிரியர்கள் பாலமாக இருந்து மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த ஒத்துழைப்புத் தாரீர்" என்று அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலையில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் பேசும்போது வேண்டுகோள் விடுத்தார்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (01.08.2024) வந்தவாசி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித் துறை சார்பாக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பள்ளி சீருடைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணி வேந்தன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-**

முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் மக்களுக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து அந்த திட்டங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு சீருடைகள் மற்றும் மிதிவண்டிகள் வழங்குகிற நிகழ்வு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 2173 பள்ளிகளில் 1,47,513 மாணவ, மாணவிகளுக்கு சீருடைகள் வழங்குகிறதற்கு தொடங்குகிற நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது.

2024-25 கல்வியாண்டில் ஒவ்வொரு மாணவ, மாணவிகளுக்கும் 4 இணை சீருடைகள் வழங்க அரசின் சார்பாக முடிவு செய்யப்பட்டது. பள்ளி சீருடைகளின் விமர்சனங்களை தவிர்க்கும் விதத்தில் முதலமைச்சர் இந்த ஆண்டு முதல் மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பள்ளிகளுக்கு நேரடியாக சென்று ஒவ்வொரு மாணவ, மாணவியரும் அளவு எடுக்கப்பட்டு சரியான அளவில் நேர்த்தியாக தைக்கப்பட்டு வழங்கப்பட உள்ளது. சீருடைகளில் கேன்வாஷ் காலர் வைத்தல், தரமான தையல், தரமான 2 ப்ளே நூல், தரமான பட்டன் என பொருத்துவதற்கு அரசின் சார்பில் ஆணையிடப்பட்டுள்ளது.

**ரூ.10.43 லட்சத்தில் மிதிவண்டிகள்!**

மேலும் 2024-25 கல்வியாண்டில் திருவண்ணாமலை கல்வி மாவட்டத்தை பொறுத்தவரையில் 167 பள்ளிகளைச் சார்ந்த பதினொன்றாம் வகுப்பு பயிலும் 9,862 மாணவர்களுக்கும், 11,769 மாணவிகளுக்கும் என மொத்தம் 21,631 மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 10 கோடியே 43 இலட்சத்து மதிப்பில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டு, பள்ளி மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நிலை அரசின் சார்பாக ஏற்படுகிறது.

பொதுவாக பொருளாதாரத்தில் நலிவடைந்த பெற்றோர்களால் மிதிவண்டி, பள்ளி புத்தகங்கள், சீருடைகள் வாங்கி கொடுப்பதில் பொருளாதாரம் பிரச்சனை இருப்பதால் அரசாங்கம் நேரடியாக பொறுப்பேற்றுக் கொண்டு மாணவ, மாணவியர்களுக்கு வழங்குகிறது.

**கல்வித்தரத்தை உயர்த்திட ஒத்துழைப்பீர்!**

நமது மாவட்டத்தில் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். நமது மாவட்டத்தை பொறுத்தவரையில் விவசாய குடும்பத்தை சார்ந்த பள்ளி மாணவ, மாணவியர்கள் பெரும்பான்மையாக பள்ளியில் படித்து வருகின்றனர். அரசிற்கும் பள்ளிகளுக்கும் பாலமாக இருந்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் இருந்து வருகின்றனர். எனவே ஆசிரியர்கள் அனைவரும் நமது மாவட்டத்தின் கல்வி தரத்தை உயர்த்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

**அயராது உழைக்கும் நம் முதல்வர்!**

மேலும் முதலமைச்சர் அனைத்து மாநிலங்களிலும் சிறந்த மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று அயராது மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசின் கணக்கெடுப்பில் வறுமை ஒழிப்பிலும், பசிப்பிணி அகற்றுவது, மக்கள் நலம் பேணுவது என பலத்துறைகளில் தமிழ்நாடு முதன்மையாக இருந்து வருகிறது. கல்வித்துறையில் நமது மாவட்டத்தை உயர்த்துவதில் ஆசிரியர்கள் பங்களிக்க வேண்டும்.

பள்ளியில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். நன்றாக படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு மடங்கு கற்றுக் கொடுத்தால் கற்றுக்கொள்வான். சராசரியாக படிக்கின்ற மாணவன் நன்றாக படிக்கின்ற மாணவனை பார்த்து நன்றாக படிக்க வேண்டும் என முயற்சி செய்வான். மூன்றாவது தரத்தில் உள்ள மாணவன் காரணமாக தான் தேர்ச்சி நிலை பின்தங்குகிறது. ஏனென்றால் விவசாய மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக அந்த மாணவன் கல்வி நிலை உள்ளது.

எனவே மூன்றாவது தரத்தில் உள்ள மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்கள் கவனம் செலுத்தி முதல் தரத்தில் உள்ள மாணவர்களை போல் உருவாக்க வேண்டும் என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

மேலும், பள்ளிக்கல்வித் துறை சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு பள்ளி மாணவ - மாணவிகளுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளையும், தொடர்ந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பாக அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளி சீருடைகளை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேஷ்மூர்த்தி, செய்யார் சார் ஆட்சியர் செல்வி பல்லவி வர்மா, செய்யாறு மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) திருமதி ஜெயகாந்தம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி பார்வதி சீனிவாசன், வந்தவாசி ஒன்றியக்குழு தலைவர் திருமதி ஜெயமணி ஆறுமுகம், வந்தவாசி நகர மன்ற தலைவர் எச்.ஜலால், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பெண்கள் முன்னேற்றத்தில்

# தமிழ்நாட்டை முதலிடத்திற்குக் கொண்டு வந்தது 'திராவிட மாடல்' அரசு!

## தமிழ்நாடு மகளிர் உச்சிமாநாட்டில் – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

**சென்னை, ஆக. 2-**

**"பெண்கள் முன்னே ற்றத்தில் தமிழ்நாட்டை முதலிடத்திற்கு கொண்டு வந்தது திராவிட மாடல் அரசு" என்று தமிழ்நாடு மகளிர் உச்சி மாநாடு 2024ல் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றிய அமைச்சர், முனைவர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

'தி இந்து' குழுமத்தின் 'தமிழ்நாடு மகளிர் உச்சி மாநாடு 2024' நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கலந்துகொண்டு 'சுடர் பிரகாசிக்கும் கனவுகள், ஊக்கமளிக்கும் கதைகள்' நூலினை வெளியிட்டுச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

சில நாட்களுக்கு முன், தமிழ்நாடு குறித்து வடமாநில பெண்கள் பேசுவதை இன்ஸ்டாகிராம் ரீல்சில் பார்த்தேன்; அதில் பெரும்பாலான வடமாநில பெண்கள் இங்கே இயல்பாக, வழக்கமாக இருக்கும் விசயங்களை சொன்னார்கள் சென்னை பாதுகாப்பான நகரம், பெண்கள் இங்கே அதிக மரியாதை பெறுகிறார்கள், இங்கே யாரும் பெண்களை தொந்தரவு செய்யவதில்லை என அதில் ஒரு பெண்மணி சுவாரஸ்யமான ஒரு விசயத்தை சொன்னார்: அந்த பெண்மணி சென்னைக்கு வந்து வாழத் தொடங்கிய போது, எல்லோரும் அவரிடம் எங்கே வேலை செய்கிறீர் என்று கேட்டிருக்கி றார்கள். ஏனெனில் அனைவரும் அவர் வேலை செய்கிறார் என்று நினைத்து ள்ளார்கள் ஏனென்றால் தமிழ்நாட்டில் பெரும்பாலான பெண்கள் வேலை செய்கிறார்கள். இது அவர் வளர்ந்து, வாழ்ந்த அவரின் சொந்த மாநில அனுபவத்திலிருந்து மிகவும் மாறுபட்டது. ஏனெனில் இங்கே தமிழ்நாட்டு பெண்கள் வேலைக்குச் செல்வது இந்தியாவின் மற்ற பகுதிகளை விட நீண்ட காலத்திற்கு முன்பே சாதாரணமாகிவிட்டது.

20 வருடங்களுக்கு முன்பு என்னுடைய குழந்தைக்கு இவ்வளவு பாடப்புத்தகங்களை ஏன் கொடுக்கிறீர்கள்? அதனால் என்ன பயன், அதற்கு பதிலாக அவள் வேலை செய்யலாம் என பெற்றோர்கள் கேட்பார்கள். இன்று என்னுடைய பெண் குழந்தை ஓலா நிறுவ னத்தில் வேலைக்குச் செல்ல என்ன படிக்க வேண்டும் என கேட்கிறார்கள். ஏனெனில் தொழில்மயமாக்கல் கொண்டுவரும் வாழ்க்கைத் தரத்தை தாய்மார்கள் விரும்புகிறார்கள்.

இது வெறும் கதையோ அல்லது செய்தியோ அல்ல. தமிழ்நாட்டு பெண்கள் மற்றவர்களை விட எவ்வாறு முன்னேறியி ருக்கிறார்கள் என்பதைப் பல தரவுகள் காட்டுகின்றன.



**இந்திய சராசரியை மிஞ்சிய தமிழ்நாடு!**

இந்திய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் அனைத்து பெண்களில் 42% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். தமிழ்நாட்டில் சேவை மற்றும் உற்பத்தி போன்ற முக்கிய துறைகளில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகம். சேவை மற்றும் உற்பத்தி துறைகளில் பெண்களின் தேசிய சராசரி பங்களிப்பு 43% ஆகும். இதில், குஜராத் 44% மற்றும் மகாராஷ்டிரா 35% ஆக இருக்கும் போது தமிழ்நாட்டில் இது 64% ஆக இருக்கிறது. இதன் பொருள் பெண்கள் தாழ்மையான வேலைகளில் மட்டுமே ஈடுபடவில்லை, அவர்கள் முக்கியமான பொருளாதாரத்தி லும் பங்கெடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அரசு வேலைகளில் பெண்களின் பங்களிப்பு 52% ஆக இருக்கிறது; ஆனால் இதன் தேசிய சராசரி 36% மட்டுமே.

தமிழ்நாட்டில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 47% (GER RATIO) ஆக இருக்கும் நிலையில், பெண்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 47.3% ஆக உள்ளது; ஆனால் தேசிய அளவில் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 28.4% மட்டுமே. இந்தியாவில் உள்ள அனைத்து பெண் பிஎச்டி மாணவர்களில் 17.8% க்கும் அதிகமானவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்பதோடு இது ஒரு மாநிலத்தின் அதிகபட்ச சராசரி ஆகும். உயர்நிலைக்'கல்வியில் இடைநிற்றல் ஆகும் மாணவி களின் தேசிய சராசரி விகிதம் 12.3% ஆக இருக்கும்போது தமிழ்நாட்டின் சராசரி 2.5% ஆக மட்டுமே இருக்கிறது. இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்? தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட இவ்வளவு முன்னேறியிருப்பது ஏன்?

இதற்கான முக்கிய காரணம் தமிழ்நாட்டின் அற்புதமான பெண்களே, இரண்டாவது முக்கிய காரணம் அரசியல் சார்ந்த தொடர்ச்சியான சமூக சீர்திருத்தங்கள் தான். இந்த சீர்திருத்தமானது தந்தை பெரியாரின் சமூக நீதி அரசியலுடன் தொடங்கி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், செல்வி ஜெயலலிதா மற்றும் திராவிட நாயகரான நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோரின் முயற்சி களால் இப்போதும் தொடர்கிறது. தமிழ்நாடு எப்படி தொடர்ந்து முன்னேற முயற்சி செய்தது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் பெண்கள் காவல் துறையில் இருப்பது தான்.

1929ல் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டில் தந்தை பெரியார் பெண்களை போலீஸ், ராணுவம் போன்ற துறைகளில் பணிக்குச் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி னார். 1973 ல் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிகாலத்தில்தான் காவல் துறையில் மகளிரை பணிநியமனம் செய்யும்முறை நடைமுறைக்கு வந்தது. ஒரு சப்–இன்ஸ்பெக்டர், ஒரு தலைமை காவலர், 20 காவலர்கள் என மொத்தம் 22 பெண்கள் முதன்முதலில் பணியமர்த்தப்பட்டனர். 1992 ஆம் ஆண்டு செல்வி ஜெயலலிதா ஆட்சி காலத்தில், சென்னை ஆயிரம் விளக்கில் முழுவதும் பெண்களைக் கொண்ட அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டது. தற்போது தமிழகம் முழுவதும் 202 மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன.

2004 ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் பெண்களை மட்டுமே கொண்ட கமாண்டோ படை, அனைத்து மகளிர் போலீஸ் படை (பெண் போலீஸ் பட்டாலியன்) ஆகியவை உருவாக்கப்பட்டன. இன்று, காவல்துறையில் அனைத்து பதவிகளிலும் 30% பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், தமிழ்நாடு காவல் துறையில் 20,000க்கும் அதிகமான பெண் காவலர்கள் உள்ளனர். பேரறிஞர் அண்ணாவின் 'சுயமரியாதை திருமண சட்டம், முத்தமிழறி ஞர் கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு குடும்ப சொத்தில் சம உரிமை, செல்வி ஜெயலலிதாவின் தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகளிர் உரிமைத் தொகை போன்ற மகத்தான திட்டங்களை செயல்படுத்தியதற்காக அனைத்து தலைவர்களுக்கும் நாம் நன்றிக்'கடன்பட்டிருக்கிறோம்.

**முதலமைச்சரின் முத்தான திட்டங்கள்!**

பெண்களை அதிகாரமயமாக்கும் பணிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024 ஐ வெளியிட்டார். அதில், பாலின உணர்திறன் கொண்ட கல்வி முறையை நிறுவுதல் மற்றும் பெண்குழந்தைகளின் இடை நிற்றல் விகிதத்தை குறைத்தல். வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல். வேலை வாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.

அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல். பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சி களுக்கு ஆதரவளித்தல். பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல். தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல். நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல். மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல் போன்றவை மகளிர் நலனை மேம்படுத்தும் முக்கிய குறிக்கோள்களாக உள்ளன.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், பணிபுரியும் மகளிருக்காக தோழி விடுதிகள், அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம் (இதன்மூலம் பெண்கள் மாதந்தோறும் 900 1200 வரை சேமிக்கிறார்கள்), ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பு 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்வு ( நாட்டிலேயே மிக அதிகம் ), தொழில் துறை: சிப்காட்களில் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், புதிய தொழிற்சாலைகளில் பெண்கள், திருநங்கை களுக்கு DEI மானியம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் மகளிருக்கான சீர்மிகு முன்னோடி திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உரையாற்றினார்.